# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 54/2016

P.W.1 - ஷம்ஷாத் பேகம் க/பெ.அப்துல் ரசாத்

DATE - 16.08.2023.

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1, 3, மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

5வது பிரதிவாதி பாருக்அகமது என்னிடம் எந்த காலத்திலும் கணக்கு வழக்குகள் ஒப்படைத்ததில்லை என்றால் சரி தான் . என் கணவர் இறந்த பிறகு 5ம் பிரதிவாதியிடம் கணக்கு வழக்குகளை கேட்ட போது அவர் எதனால் என்னிடம் கொடுக்கமாட்டேன் என்று சொன்னார் என்றால் என் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த டேனரி கேன்சல் செய்யப்பட்டுவிட்டதால் கணக்கு கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். தாவா சொத்துகளுக்கும் டேனரிகளுக்கும் நான் உரிமையாளர் இல்லை என்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றும் அதனால் என்னிடம் கணக்கு ஒப்படைக்க இயலாது என்று கூறினார் என்றால் சரியல்ல. டேனரியில் எவ்வளவு லாபம் வந்தது அல்லது நஷ்டம் எவ்வளவு என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2009 முதல் 2011 வரை ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு லாபம் வந்தது என்றால் ஒரு மாதத்திற்கு ரூ.1,50,000/- பணம் என்னிடம் கொடுப்பார்கள். எனக்கு எந்த கணக்கு வழக்கும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எதுவும் தெரியாது என்பதால் தான் எந்தவித ஆவணங்களும் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் சில சொத்துகளை என் பெயரில் கிரையம் பெற்று 3ம் நபருக்கு அதிக விலைக்கு விற்பார் என்றால் சரி தான். அது போன்று எத்தனை ஆவணங்கள் பதிவு செய்துள்ளார் என்றால் 2 வீடுகள் வாங்கி விற்றுள்ளார். ரியல் எஸ்டேட் மூலம் எத்தனை இடங்கள் வாங்கி உள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் எத்தனை சொத்துகள் உள்ளது என்றால் ஒரே ஒரு வீடு உள்ளது. என் பெயரில் சுமார் 3

கோடி மதிப்புள்ள 2 , 3 வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள சொத்துகள் அப்துல் ரசாக்கை திருமணம் செய்த பிறகு கிரையம் பெற்ற சொத்துகள் என்றால் சரி தான். என் கணவர் என்னுடன் திருமணம் ஆன பிறகு எத்தனை முறை பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் செட்டில்மென்ட் எழுதி வைக்கப்பட்டது குறித்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. அது எந்த பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பேரணாம்பட்டு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் என்னுடைய உறவினர்களா என்றால் முதல் சாட்சி என்னுடைய சகோதரியின் கணவர் 2ம் சாட்சி யாரென்று தெரியாது. இந்த 2 ஆவணங்களும் தமிழில் தான் எழுதபட்டுள்ளது என்றால் சரி தான். அப்துல் ரசாக்கிற்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது என்றாலும் மோசடியாக இந்த ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த சொத்தை அப்துல் ரசாக் எனக்கு எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த சொத்தை பதிவு செய்யும் போது என்னென்ன ஆவணங்கள் கொண்டு வந்தார் என்றால் பழைய ஆவணங்களை எடுத்து வந்தார். அப்படி கொண்டு வந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்துகளை ஹீபா மூலம் அவரின் பிள்ளைகளுக்கு 03.08.2007 தேதியில் கொடுத்து விட்டதால் தாவா சொத்தை எனக்கு அப்துல் ரசாக் எழுதி வைக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. டேனரி தொழிலில் எனக்கு முன் அனுபவம் இல்லை என்றால் சரி தான். எனக்கு டேனரி தொழிலில் எந்த முன் அனுபவமும் இல்லாததால் அந்த டேனரிகளை என் பெயரில் எழுதி வைக்க எந்த வித அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. அப்துல் ரசாக்கிற்கு எந்தவித உடல் நலக்குறைவும் இல்லை என்றால் அவருக்கு சர்க்கரை வியாதி இருந்தது. சென்னையில் இருந்த போது எந்த மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் MMM மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வ்நதார். அவர் இறப்பதற்கு முன்பு பெங்களுருக்கு எதற்காக சென்றார் என்றால் ஒரு திருமணத்திற்கு சென்றார். அவர் செல்லும் போது நன்றாக தான் இருந்தார் என்றால் சரி தான். யார் வீட்டில் அப்துல் ரசாக் இறந்தார் என்றால் அவரின் அண்ணன் மகன் வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு

செல்லும் போது இறந்தார். நான் என்னுடைய பிராதிலும் முதல் விசாரணைக்கான வாக்குமூலத்திலும் அவர் இருதய நோயினால் இறந்து விட்டதாக கூறியுள்ளது பொய் என்றாலும் அவருக்கு அவ்வாறு எந்த நோயும் இல்லை என்றாலும் சரியல்ல. மருத்துவமனைக்கு எடுத்து சென்ற போது அவர் மாரடைப்பால் இறந்து விட்டதாக மருத்துவர் கூறினார்கள். நான் தாக்கல் செய்துள்ள இறப்பு சான்றிதழில் அவர் வீட்டில் இறந்து விட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது, மாரடைப்பால் இறந்து விட்டதாக குறிப்பிடவில்லை என்றால் மாரடைப்பால் இறந்து விட்டதாக தான் இறப்பு சான்றிதழ் கொடுத்தார்கள். என் கணவர் மர்மமான முறையில் இறந்து விட்டார் என்றாலும் அவர் இறப்பிற்கு நான் தான் காரணம், சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு நான் தான் அனுப்பினேன் என்றால் சரி தான். வழக்கறிஞருக்கு விவரங்கள் சொன்னது நான் தான் என்றால் சரி தான். வழக்கறிஞருக்கு தாவா தாக்கல் செய்வதற்கு தகவல் சொன்னது நான் தான் என்றால் சரி தான். அப்போது என்னென்ன ஆவணங்கள் எடுத்து சென்றேன் என்றால் அசல் ஆவணம் மற்ற ஆவணங்கள் என்ன என்று எனக்கு ஞாபகம் இல்லை. சமீபத்தில் நான் ஹஜ் யாத்திரைக்கு சென்றேனா என்றால் இல்லை. என் கணவர் இறந்த பிறகு சில பொருள்கள் காணாமல் போய்விட்டது என்று போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னென்ன பொருட்கள் காணமால் போனது என்றால் ரூ.8,50,000/-,பணமும், 500 கிராம் நகைகள், பாஸ்போர்ட், ஆவணங்கள் ஆகியவை காணாமல் போனது. இவ்வளவு பொருட்கள் காணாமல் போயிருந்தால் போலிசில் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் வழக்கிற்காக காணமாமல் போனதாக பொய் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. இது பற்றி நான் என்னுடைய 01.06.2012 வா.சா.ஆ.3 மற்றும் பிராதிலும் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் குறிப்பிடவில்லை. வழக்கறிஞருக்காவது நான் கூறிய தகவலை அவர் சொல்லாமல் விட்டதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 2018ம் ஆண்டு பதிலுரை தாக்கல் செய்யும் போது தான் இந்த விவரங்கள் பற்றி கூறினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 அனுப்பிய கால கட்டத்தில் முதல் பிரதிவாதியின் மகளுக்கு திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியவில்லை.

நான் கொடுத்த அறிவிப்பிற்கு முதல் பிரதிவாதி பதில் அறிவிப்பி அனுப்பினாா் என்றாலும் அந்த பதில் அறிவிப்பை நான் இந்த வழக்கில் தாக்கல செய்யவில்லை என்றாலும் பதில் எதுவும் அனுப்பவில்லை. அறிவிப்பு அனுப்பி விட்டு இந்த வழக்கை 2012ல் தாக்கல் செய்து விட்டு 2016 வரை வழக்கை நம்பர் செய்யாமல் முதல் பிரதிவாதி உடன் சமாதானம் பேசி பணம் கேட்டு வந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 பட்டா மாற்றம் செய்யவதற்கு முன்னா் 1 முதல் 4 பிரதிவாதிகளை வருவாய் துறை அதிகாரிகள் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் தாக்கல செய்துள்ள ஆவணங்கள் அப்துல் ரசாக் இறந்த 3 மாதங்களுக்குள் ஏற்பட்ட ஆவணங்கள் என்றாலும் என் கணவா் இறந்த 4 மாதங்கள் வரை நான் வெளியில் எங்கும் செல்ல கூடாது என்றாலும் தாவா சொத்தை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காகவே பட்டாவை அவசர அவரசமாக மாற்றி உள்ளேன் என்றாலும் சரியல்ல. அப்துல் ரசாக் தாவா சொத்துகளை 03.08.2007 தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஹீபா மூலம் கொடுத்த தேதியல் இருந்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்நது வருகிறார்கள என்றால் சரியல்ல. தாவா சொத்துகளின் உரிமை ஹீபா கொடுத்த தேதியில் இருந்தே 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வந்து விட்டது என்றாலும் சொத்துகளில் இருந்த வருமானம் மட்டும் தான் அப்துல் ரசாக்கிற்கு கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துகளின் நிர்வாகத்தை முதல் பிரதிவாதி தான் மற்ற பிரதிவாதிகள் சார்பில் பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை எழுதி வைக்க அப்துல் ரசாக்கிற்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும் இநத வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும' என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் மோசடியாக பெற்ற ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் மூலம் எனக்கு எந்தவித உரிமையும் சித்திக்காது என்றாலும் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

Additional District Judge(FTC),

Vellore.